# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2087/8 - 2018 සැප්තැම්බර් මස 03 වැනි සඳුදා - 2018.09.03

*2087/8 ஆம் இலக்கம் - 2018 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 03 ஆந் திகதி திங்கட்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

### *அரசாங்க அறிவித்தல்கள்*

***1974 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைச் சட்டம்***

*92 ஆம் பிரிவின் கீழான கட்டளை*

*1974 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைச் சட்டத்தின் 92 ஆம் பிரிவின் கீழ், எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் பிரகாரம், நகரத் திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சர் ரவூப் ஹக்கீம் ஆகிய நான், குறித்த சபைக்கு கவரம்மான போகஹகுபுர கூட்டிணைந்த நீர் வழங்கல் கருத்திட்டத்தின் நீர் சுத்திகரிப்பு அலகு மற்றும் உத்தியோகபூர்வ விடுதி ஆகியவற்றை நிர்மாணிப்பதற்காக காணிப்பகுதி ஒன்றினை சுவீகரித்துக் கொள்வதற்கான தேவை ஏற்பட்டுள்ளமையினால், இங்கு கீழ்க் காணப்படும் அட்டவணையில் குறித்துக்காட்டப்பட்டுள்ள காணிப்பகுதியின் அசையாச் சொத்துரிமையை சுவீகரித்துக் கொள்வதை இக்கட்டளையினூடாக அனுமதிக்கின்றேன்.*

*ரவூப் ஹக்கீம்,*
*நகரத் திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சர்.*

*நகரத் திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சு,*
*இல. 35, லக்திய மெதுர,*
*புதிய பாராளுமன்ற வீதி,*
*பெலவத்தை,*
*பத்தரமுல்லை,*
*2018, ஓகத்து 21,*
*5/2/1/1411.*




*இவ் அதி விசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

**அட்டவணை**

பதுளை மாவட்டத்தில், வெலிமடை பிரதேச செயலாளர் பிரிவில், அபேவெல - ஏ கிராம அலுவலர் பிரிவில் வேர்விக்வத்த க்லென்ஷ் பிரிவு கள இலக்கம் 06 கிராமத்தில் அமைந்துள்ள - வேர்விக்வத்த க்லென்ஷ் பிரிவு கள இலக்கம் 06 என்றழைக்கப்படும் காணியின் முழு விஸ்தீரணத்தில் இருந்து அண்ணளவாக 02 ஏக்கர் 02 றூட் விஸ்தீரணத்தையுடைய பின்வரும் எல்லைகளுக்குள் அமைந்துள்ள காணிப்பகுதி.

வடக்கு : அக்காணியின் எஞ்சியுள்ள பகுதி மற்றும் ரதம்பொல - அபேவெல வீதி.
கிழக்கு : அக்காணியின் எஞ்சியுள்ள பகுதி மற்றும் ரதம்பொல - அபேவெல வீதி.
தெற்கு : அபேவெல நீர்ப்பாசன அருவி.
மேற்கு : அக்காணியின் எஞ்சியுள்ள பகுதி மற்றும் ரதம்பொல - அபேவெல வீதி.

*காணிக்கு உரிமை கோருகின்றவரின் பெயரும் முகவரியும் :*

01. பிரதம நிறைவேற்று அதிகாரி,
வேர்விக் - ஹக்கல வத்த,
வரையறுக்கப்பட்ட மல்வத்த பெருந்தோட்ட நிறுவனம்,
அபேவெல.

*09-425*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.